# விவிலியப் பணிக்குழு செய்திகள்

**27.10.2024** அன்று புனித ஆரோக்கிய அன்னை ஆலயம், எம்.ஏ. நகர் பங்குதளத்தில் **விவிலிய ஞாயிறு** சிறப்புத் திருப்பலியை பணிக்குழு செயலர் அருள்தந்தை. எட்வர்ட் அந்தோணிராஜி மற்றும் பங்குதந்தை அருள்தந்தை எட்வர்ட் சந்தோஷ் குமார் அவர்களுடன் இணைந்து சிறப்பித்தார்கள். மறைக்கல்வி மாணவர்கள் உருவாக்கிய விவிலியக் கண்காட்சியையும் திறந்துவைத்து பிள்ளைகளுக்கு பரிசளித்து பாராட்டினார்கள்.

**10.11.2024** அன்று பொதுநிலையினருக்கான ஓர் ஆண்டு சான்றிதழ் விவிலியப் பட்டயப் பயிற்சியின் (2024–2025) ஐந்தாம் மாதத்திற்கான வகுப்பு காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெற்றது. விவிலியப் பேராசிரியர் அருள்தந்தை ரீகன் அவர்கள் **"வரலாற்று நூல்களுக்கு"** விளக்கமளித்தார்கள். அதனைத் தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இப்பயிற்சி வகுப்பில் 90 நபர்கள் பங்குபெற்றார்கள். அன்று மாலை விவிலியப் பணிக்குழுவின் தன்னார்வப் பணியாளர்களுக்கான மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது.

**10.11.2024** அன்று **“360 நாட்களில் விவிலியம் வாசிப்போம் 2024”** இணைந்து விவிலியம் வாசிப்பவர்களுக்கான எட்டாவது தேர்வு நடைபெற்றது. இதில் தமிழகத்தின் அனைத்து மறைமாவட்டங்களிலிருந்தும் வெளி மாநிலம் மற்றும் வெளி நாடுகளிலிருந்தும் 759 நபர்கள் கூகுள் படிவத்தின் வழியாக தேர்வில் பங்கேற்றனர். 169 நபர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றார்கள். சென்னை–மயிலை உயர்மறைமாவட்டத்திலிருந்து மட்டும் 84 பங்குகளிலிருந்து 304 நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். 39 பங்குகளைச் சார்ந்த 63 நபர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றார்கள். இவ்வாண்டுக்கான 10வது மற்றும் இறுதி தேர்வு 22.12.2024 அன்று நடைபெறவுள்ளது.

**10.11.2024** அன்று **“Read Bible in 2024”** இணைந்து ஆங்கிலத்தில் ESV-CE (English Standard Version-Catholic Edition) திருவிவிலியத்தை முழுமையாக வாசிப்பவர்களுக்கான 9ம் மாதத் தேர்வு கூகுள் படிவத்தின் வழியாக நடைபெற்றது. இதில் 84 நபர்கள் தேர்வில் பங்கேற்றார்கள். இவ்வாண்டுக்கான 10வது மற்றும் இறுதி தேர்வு 22.12.2024 அன்று நடைபெறவுள்ளது.

**நவம்பர் 13ம் தேதி: தேசிய விவிலியப் பணிக்குழுவின் நிர்வாக செயலர் அருள்தந்தை. யேசு கருணாநிதி** அவர்கள் நமது விவிலியப் பணிக்குழு அலுவளகத்தையும் பணிக்குழு செயலர் மற்றும் தன்னார்வ பணியாளர்கள் அனைவரையும் சந்தித்து உரையாடினார். விவிலியப் பணிக்குழுவின் செயல்பாடுகளையும் புதிய முயற்சிகளையும் கேட்டு அறிந்துக்கொண்டு பாராட்டினார். மேலும் விவிலியப் பணிக்குழுவின் தன்னார்வ பணியாளர்களின் செயல்பாடுகளையும் பாராட்டி ஜனவரி மாதம் 21–23 வரை நாகப்பட்டினம் வேளாங்கண்ணி திருத்தலத்தில் நடைபெறவுள்ள தேசிய விவிலிய மாநாட்டில் பங்கேற்க எமது விவிலியப் பணிக்குழுவினர் அனைவருக்கும் அழைப்புக்கொடுத்தார்கள்.

**நவம்பர் 16, 17** (சனி, ஞாயிறு) தேதிகளில் தமிழக விவிலியப் பணிக்குழு கோனாங்குப்பம் புனித பெரியநாயகி அன்னை திருத்தலத்தில் இறைவார்த்தைப் பணியாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் இரண்டு நாள் பயிற்சி பாசறை நடத்தப்பட்டது. இதில் 1. எரேமியாவின் இறைவார்த்தை ஆன்மீகம். 2. அன்னை மரியா இறைவார்த்தை ஆன்மீகத்தின் மாதிரி என்ற தலைப்பின்கீழ் **அருள்பணி. டேவிட் ஸ்டான்லி குமார்** அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். இறைவார்த்தைப் பணியில் பவுலடியாரின் அர்ப்பணம் என்ற தலைப்பில் தமிழக விவிலியப் பணிக்குழுவின் பொதுச்செயலர் **அருள்பணி. ஸ்தனிஸ்லாஸ்** அவர்கள் கருத்துரை வழங்கினார்கள். **அருள்தந்தை. லூக்காஸ் ராஜ்** அவர்கள் அருள்வாக்கு வாசிப்பு குறித்துப் பயிற்சி அளித்தார்கள். **அருள்சகோதரி லூர்து மேரி** அவர்கள் திரு அவையின் வாழ்வில் இறைவார்த்தை என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார்கள். 6 குழுக்களாக வந்திருந்தவர்கள் இணைந்து முன்னெடுக்க வேண்டிய இறைவார்த்தைப் பணிகள் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்த இறைவார்த்தை பணியாளர்கள் பயிற்சியில் நமது சென்னை–மயிலை உயர்மறைமாவட்டத்திலிருந்து 9 நபர்கள் பங்குகொண்டனர். பயிற்சியில் ஈடுபட்ட அனைவருக்கும் விவிலியப் பணிக்குழுவின் நெஞ்சம் நிறைந்த நன்றிகளும் பாராட்டுக்களும்.

**செயலர்**

**அருள்பணி. எட்வர்ட் அந்தோணி ராஜி**